செய்தி வெளியீடு எண்:217 நாள்: 19.04.2017

# மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டம்

****

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் 19.4.2017 அன்று சென்னையில் நடைபெற்றது. ஆய்வுக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசுச்செயலர், திரு ஆ. கார்த்திக், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், திரு மா. சந்திரசேகரன், இஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர், திரு அதுல் ஆனந்த், இஆ.ப., மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் முணைவர் மா. வள்ளலார், இஆ.ப., இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு) அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மற்றும் பொதுப் பணித் துறை அலுவலர்கள், (கட்டடங்கள்)இணைத்தலைமைப்பொறியாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் துவக்கத்தில், 2016–17 ஆம் ஆண்டிற்கான சிறந்த காப்பாளர்/ காப்பாளினிகளுக்கான முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் முறையே கீழ்க்கண்ட காப்பாளர் காப்பாளினிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

திரு .ப்பி. சரவணன், பட்டதாரிக் காப்பாளர்,
அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, இராமநாதபுரம்.

திருமதி .ப்பி. கிரேஸ் ஆரோக்கியமேரி, பட்டதாரி காப்பாளினி,
அரசு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி,
சூசையப்பர்பட்டினம், சிவகங்கை மாவட்டம்.

திரு .பி. ராமராஜ், பட்டதாரிக் காப்பாளர்,
அரசு பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி,
திருநகர், மதுரை மாவட்டம்.

திட்ட பயன்கள் உரிய நேரத்தில் ஏழை எளிய மக்களை சென்றடையும் விதத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் திறம்பட பணியாற்றிட வேண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அனைத்து விடுதிகளையும் மாதந்தோறும் ஆய்வு செய்து அவை நல்ல முறையில் செயல்படுவதை உறுதி செய்யவும் , மாணவர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான இருப்பிடம் மற்றும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் அவர்கள் கல்வி கற்பதில் அதிக கவனம் செலுத்தி உயர் மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்திட வழிவகுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

அனைத்து விடுதிகளும் சொந்தக்கட்டடங்களில் இயங்கும் வகையில் இவ்வரசால் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக , மொத்தமுள்ள **1338** விடுதிகளில் , **1247** விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. **55** விடுதிகளுக்கு சொந்தக்கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே உத்தரவிடப்பட்டு பொதுப்பணித்துறையால் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. எஞ்சிய **36** விடுதிகளுக்கு நடப்பாண்டில் சொந்தக்கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு விடுதிகள் தேவைப்படும் இடங்களில் புதிய விடுதிகளைத் துவக்குவதற்கு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வரசின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் , கல்லூரி விடுதி மாணவர்களுக்கான உணவுக்கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு **875** ரூபாயிலிருந்து **1,000** ரூபாயாகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கான உணவுக்கட்டணத்தை **755** ரூபாயிலிருந்து **900** ரூபாயாகவும் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.12.19 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் .

**2016–17**ம் ஆண்டில் பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி ( Career Guidance Programme) ரூ.**8.00** இலட்சம் செலவில் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. இதன்மூலம் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெறுவதற்குரிய வழிகளை அறிய வாய்ப்பு ஏற்பட்டது என விடுதி மாணவ, மாணவியர்களாலும் , மாவட்ட அலுவலர்களாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் தொடர்ச்சியாக, **2016–17** ம் ஆண்டில் வரவுசெலவுத் திட்டம் மற்றும் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட கீழ்க்காணும் பிற புதிய அறிவிப்புகள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

- கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கான ஆங்கில பேச்சாற்றல் மற்றும் அவர்களது தனித்திறனை வளர்க்கும் பயிற்சி திட்டம் செயல்படுத்தப்படும்.
- கல்லூரி விடுதி மாணவ/ மாணவியர்களுக்கு பாய்களுக்குப் பதிலாக ரூ.**25.00** இலட்சம் செலவில் ஜமக்காளம் வழங்கப்படும்.
- விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்கள், இட்லி வேகவைப்பான்கள் வழங்கப்படும்.
- கல்லூரி விடுதிகளுக்கு துணிதுவைக்கும் இயந்திரங்கள் , நவீன மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும் .

இவற்றை நல்ல முறையில் விடுதி மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்கு வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

கள்ளர் பள்ளிகளில் பயிலும் மணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திடும்பொருட்டு, 15 அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள் எல்காட் நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு கள்ளர் தொடக்கநிலை /நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும், நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அரசு கள்ளர் பள்ளிகளில் 99 சதவீதம் பள்ளிகள் அடிப்படை வசதிகளைக் கொண்டுள்ளன.

2017–2018 ஆம் ஆண்டில் விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் புதிய மாணவ, மாணவியர்களை விடுதி மாணவர் தேர்வுக்குழு மூலம் சேர்த்திடவும் , விடுதி மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவப்பரிசோதனை மேற்கொள்ளுதல், சீருடை வழங்குதல் ஆகியவற்றை உரிய காலத்திற்குள் முடித்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

விடுதிகளில் காலியாக உள்ள சமையலர் , காவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் (பகுதி நேரம் / முழு நேரம்) காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்க 2017–18 ம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 180 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை காலதாமதம் இல்லாது வழங்கிட உரிய முன்னேற்பாடுகளை எடுத்திடவும் அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை தாமதமின்றி உரிய நேரத்தில் அவர்களது வங்கிக்கணக்கில் சென்றடைவதை உறுதி செய்யவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள் .

பத்தாம் வகுப்பு , 12 ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் மாநில / மாவட்ட அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு இத்துறையால் வழங்கப்படும் பொதுப்பரிசுகள், பேரறிஞர் அண்ணா நினைவு பரிசு மற்றும் தந்தை பெரியார் நினைவுப் பரிசு , மாண்புமிகு முதலமைச்சரின் தகுதி பரிசுத்திட்டம், தலைசிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலைக்கல்வி பயிலுவதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டங்களுக்கு உரிய பயனாளிகளை உரிய காலத்திற்குள் தேர்வுசெய்து பரிசுகளை வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

விலையில்லா தையல் இயந்திரம், சலவைப்பெட்டி வழங்குதல், நரிக்குறவர், சீர்மரபினர் மற்றும் உலாமாக்கள் நல வாரியங்களின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்குவதில் காலதாமதமின்றி முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

2016–17 ம் ஆண்டு முதல் உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது .

கிறிஸ்தவ தேவாலயங்களைப் புனரமைப்பதற்காக 2017–18 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது . புனரமைப்பு செய்யப்படவேண்டிய பணிகள் குறித்த கருத்துருக்களை மாவட்ட நிர்வாகம் மூலமாக பரிந்துரை செய்து சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

2015 –16 ம் ஆண்டு அகில இந்திய அளவில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின் உயரிய செயல்பாட்டிற்காக , தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகத்தால் “சிறந்த செயல்பாட்டிற்கான (துங்கம்) விருது'' வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது , புதுதில்லியில் 13.1.2017 அன்று நடைபெற்ற தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழக வெள்ளிவிழாக்கொண்டாட்டத்தில் மாண்புமிகு சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்திற்கு விருது கிடைக்கப்பெற்றதற்கு சிறப்பான முறையில் செயலாற்றிய டாப்செட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

2016-17 ம் ஆண்டில் முதன்முறையாக பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலமாக ரூ. 100 கோடி கடனுதவி வழங்கப்பட்டது குறித்து பாராட்டு தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பாண்டிலும் இதேபோன்று சிறப்பான முறையில் டாப்செட்கோ மூலம் கடனுதவி வழங்கவும், டாம்கோ மூலம் ரூ.40 கோடி அளவிற்கு கடனுதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்கள்.

மொத்தத்தில் இத்துறைக்கு நடப்பு 2017–2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 988 கோடி நிதியினை முழுமையாகப் பயன்படுத்தி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள் மற்றும் ஏழ்மை நிலையில் உள்ளோர் முழுமையாக பயன்பெறும் விதத்தில் பணியாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**